


# மறக்கப்பட்டுவிட்ட கைதிகள்

ஆயிரக்கணக்கானோரைத் தடுத்துவைக்க பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைப் பயன்படுத்துகிறது இலங்கை அரசு

AMNESTY INTERNATIONAL




© இரின்நியூஸ்

கைதுசெய்யப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் 2 செப்டம்பர் 2009 அன்று கொழும்பிலே நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது பெண்ணொருவர் மயங்கிக் கிடக்கிறார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதானவர்கள் பலர் இடம் விட்டு இடம் மாற்றப்படுகின்றனர், அதனால் அவர் எங்கிருக்கிறார் என்ற விபரம் அறிவது அவருடைய குடும்பத்தினருக்கு இயலாத காரியமாகிவிடுகிறது.
*முன்பக்க அட்டை:* மே 2010, இலங்கைத் தலைநகர் கொழும்பில் சாலையோரத்து சோதனைச் சாவடி ஒன்றில், வாகனம் ஒன்றை நிறுத்தச் சொல்லி சிப்பாய் ஒருவர் உத்தரவிடுகிறார். அவசரகாலச் சட்டங்கள் தளர்த்தப்படும் என்று அரசாங்கம் கூறியிருந்தாலும், பல கடுமையான விதிமுறைகள் இன்றளவும் பயன்பாட்டில் இருந்துவரவே செய்கின்றன. © ஏ,பி. செய்தி நிறுவன புகைப்படம். எடுத்தவர் எரங்க ஜெயவர்த்தன

“மற்றவர்களுக்கெல்லாம் தூங்கும்போதுதான் பயங்கரம் என்பது கெட்டக் கனவாக வரும். ஆனால் என்னைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் என்னைக் கண்விழிக்கச் செய்வதே ஒரு பயங்கரம்தான். மூன்று வருஷத்துக்கு முன்னால் என் புருஷனை கைதுசெய்து, அவர் மீது எவ்வித குற்றமும் சுமத்தாமல் தடுத்து வைத்திலிருந்தே என் வாழ்க்கை இருளுக்குள் சிக்கிவிட்டதெனச் சொல்லலாம்.”

செல்வி, பயங்ரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் பிப்ரவரி 2007 முதல் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒருவரின் மனைவி.

இலங்கையின் ஒடுக்குமுறை மிக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்களின் விளைவாய் முறையாக குற்றம்சாட்டப்படாமலும், வழக்கு விசாரணை இன்றியும் ஆயிரக்கணக்கானவர்கள் சிறைகளில் உழன்று வருகின்றனர். சிலவேளைகளில் அவர்கள் இரகசிய சிறைகளிலும் அடைக்கப்பட்டுள்ளனர். சித்ரவதை, தடுப்புக் காவலிலேயே கொல்லப்படுதல் உள்ளிட்ட பலவிதமான துஷ்பிரயோகங்களுக்கு அவர்கள் உள்ளாகக்கூடிய ஆபத்து அதிகம்.

ககூஎகஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட தொடர்ச்சியாகவே இலங்கையில் அவசர நிலை அமலில் இருந்து வருகிறது. இலங்கையில் ஆட்சிக்கு வந்த அடுத்தடுத்த அரசாங்கங்கள் தேசியப் பாதுகாப்பை காரணம் காட்டி பெரும்பாலும் குழப்பகரமான அவசரகால விதிமுறைகள் பலவற்றை பரந்துபட்ட விஷயங்கள் தொடர்பில் அறிமுகப்படுத்தி வந்துள்ளன. சிந்தனைச் சுதந்திரம், கருத்து சுதந்திரம், அரசியல் நிலைப்பாட்டு சுதந்திரம் உள்ளிட்ட மக்களின் உரிமைகள் மோசமாக பாதிக்கப்படுவதற்கும் சிலவேளைகளில் முற்றிலும் மறுக்கப்படுவதற்கும்கூட இச்சட்டங்கள் வழிவகுத்துள்ளன. தவிர யதேச்சதிகாரமாக கைதுசெய்யப்படுதல், தடுத்துவைக்கப்படுதல் போன்றவற்றுக்கு எதிராக மக்களுக்குள்ள உரிமைகளையும் இவை பாதித்து வந்துள்ளன. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தம் உறுதி வழங்கும் உரிமைகள் இவை. இந்த ஒப்பந்தத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளபடியால் இந்த உரிமைகளை மதித்து நடக்க வேண்டியது அதன் கடமையாகும்.

## அவசரகால விதிமுறைகனு

அவசரகால சட்டங்கள் நாட்டின் அதிகாரிகளுக்கு ஒரு நபரைத் தடுத்து வைப்பதில் அளவுக்கதிகமான அதிகாரங்களை வழங்குவதோடு, இரகசிய சிறைச்சாலைகளை அவர்கள் நடத்துவதற்கும் அனுமதி அளிக்கின்றன. ஆட்கடத்தல்கள், சித்ரவதை, தடுப்புக் காவலில் மரணம் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களை ஊக்குவிப்பதாய் இவ்வகையான நடைமுறைகள் அமைந்துள்ளன. இப்படியான மனித உரிமை மீறல்கள் சர்வதேச சட்டங்களின் கீழ் வன்மையான குற்றங்களாகவும் அமைகின்றன. இலங்கையில் கடந்த முப்பது வருடங்களில், ஆயிரக்கணக்கானோர் வழக்கெதனையும் எதிர்கொள்ளாமலேயே தமது வாழ்க்கையை சிறையில் கழித்து வந்துள்ளனர். இலங்கையின் ஜனாதிபதிக்கு அவசரகால விதிமுறைகளை கொண்டுவரும் அதிகாரத்தை நாட்டின் அரசியல் சாசனச் சட்டம் ஷரத்து எண் 155 வழங்குகிறது. "அரசியல் சாசனச் சட்டம் அல்லாத பிற எந்த சட்டத்தையும் திருத்தவோ, இடைநிறுத்தவோ" அதிபருக்கு அதிகாரம் உண்டு என அந்த ஷரத்து தெரிவிக்கிறது.

தவிர பொதுப் பாதுகாப்பு உத்தரவு (PSO) போடவும் ஜனாதிபதிக்கு அரசியல் சாசன ஷரத்து 155 அதிகாரம் வழங்குகிறது. இவ்வகையான உத்தரவுகளை பிரிட்டிஷ் காலனீய அதிகாரிகள் 1947ல் இலங்கைச் சட்டங்களில் சேர்த்திருந்தனர். பின்வரும் அதிகாரங்களைக் கொண்ட அவசரகால விதிமுறைகளைக் கொண்டுவர நிறைவேற்று அதிகாரம் உடையோருக்கு அதிகாரம் உள்ளது என பொதுப் பாதுகாப்பு உத்தரவுச் சட்டம் பிரிவு எண் ரு கூறுகிறது:

- முறையாக குற்றம்சாட்டப்படாமலோ, வழக்கு நடத்தி விசாரிக்காமலோ ஒருவரைத் தடுத்துவைக்க அதிகாரம் வழங்குதல்;
- எந்த இடத்திலும் நுழைந்து தேடுதல் வேட்டை நடத்தி பொருட்களை பறிமுதல் செய்யவும் இடத்தை முற்றுகையிடவும் அதிகாரம் வழங்குதல்;
- (அரசியல் சாசனம் அல்லாத) பிற எந்த சட்டத்திலும் திருத்தங்கள் கொண்டுவருதல்;
- அவசரகால விதிமுறைகள் உட்பட சட்டத்தை மீறியவர்களை விசேட நீதிமன்றங்கள் அமைத்து விசாரித்தல்.

தவிர, அவசரகால விதிமுறைகளின் கீழ் செயல்படும் அதிகாரிகள் என்ன செய்தாலும் அவர்கள் தம் செயலை 'நல்ல நோக்கத்தில் செய்தார்கள்' என்பதாகக் கருதி அவர்களது நடவடிக்கைகள் தொடர்பாக யாரும் சிவில் வழக்கோ, கிரிமினல் வழக்கோ முன்னெடுக்க இடமளிக்காமல் செய்தல் என்பதனையும் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் செய்ய முடியும்.

## மனோ

பதுளையைச் சேர்ந்த 29 வயதுடைய மனோ, கடந்த 2007ஆம் ஆண்டிலிருந்தே முறைப்படி குற்றம்சாட்டப்படாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். மார்ச் 2007ல் ஒரு நாள் வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயத்தில் மனோவை, விடுதலைப் புலி அமைப்பின் உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் அதிகாரிகள் கைதுசெய்தனர். ஆனால் அவர் தான் விடுதலைப் புலி (LTTE) உறுப்பினர் அல்ல என்கிறார். முதலில் பல மாத காலம் சட்டத்தரணி ஒருவரைத் தொடர்புகொள்ள அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எட்டு மாதங்களுக்குப் பின்னர்தான் அவர் முதல் தடவையாக ஒரு நீதவான் முன்பு ஆஜர் செய்யப்பட்டிருந்தார். தடுப்புக்காவலில் இருந்த சமயத்தில் அவர் சித்ரவதைகளுக்கு ஆளாகியிருந்தார். அவரது வலது கையில் ஆட்காட்டி விரல் முறிக்கப்பட்டிருந்தது. அவர் பல்வேறு சிறைச்சாலைகளுக்கும் தடுப்புக் காவல் மையங்களுக்கும் மாற்றப்பட்டு தற்போது மட்டக்களப்பு சிறையில் இருந்துவருகிறார். "எல்லா விதமான கைதிகளையும் ஒரே இடத்தில் கலந்து தடுத்துவைத்துள்ளனர்" என்று அவர் கூறுகிறார். விளக்கமறியல் கைதிகளையும், தண்டனை அனுபவித்து வரும் கைதிகளையும் அவர்கள் பிரித்து வைப்பதில்லை. சிறையில் ஒழுங்கான சாப்பாடு கொடுப்பதில்லை. போதிய கழிப்பறை வசதியோ, துப்புரவு வசதியோ இல்லை... தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் பலர் தோல் வியாதிகளால் கஷ்டப்படுகிறார்கள்." என்று அவர் கூறுகிறார்.

அரசியல் கைதிகள் பலருக்கு, தனியாக சட்டத்தரணி வைத்துக்கொள்ளும் அளவுக்கு பொருளாதார வசதி இல்லை. தவிர பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளில் ஆஜராக விரும்பும் சட்டத்தரணிகளின் எண்ணிக்கையும் இலங்கையில் மிகவும் குறைவாக உள்ளது. ஏனென்றால் "பயங்கரவாத சந்தேக நபர்களுக்காக" வாதாடக்கூடாது என்று கூறி சட்டத்தரணிகளுக்கு மிரட்டல்கள் வருவதுண்டு. மட்டக்களப்பு சிறையில், முறையாக குற்றம்சாட்டப்படாமல் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள வேறு பலரை டஜன் கணக்கில் தான் சந்திக்க நேர்ந்ததாக மனோ கூறுகிறார். "என்ன குற்றத்துக்காக எங்களைத் தடுத்துவைத்துள்ளார்கள் என்று சொல்லாமலேயே. எங்களை அடைத்து வைத்துள்ளனர், எங்களை அப்படியே மறந்துபோய் விட்டார்கள." என்கிறார் அவர்.



© தனியார் படம்

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்

1979ஆம் ஆண்டு இலங்கையில்ஒரு தற்காலிக நடவடிக்கையாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் 1981ஆம் ஆண்டு இது நிரந்தரச் சட்டமானது. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் ஒருவருக்கு வழங்கப்படுகின்ற உரிமையை இடைநிறுத்த இந்தச் சட்டம் அதிகாரிகளுக்கு அனுமதி வழங்குகிறது. ஒருவர் மீது குற்றத்தை நிரூபிக்கும் வரையில் அவரை குற்றமற்றவராகவே கருத வேண்டும் என்றுள்ள உரிமையும் மறுக்கப்படுகிறது. பயங்ரவாதத்தையும் சட்டவிரோத நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்துவதற்காக இந்த அதிகாரத்தை இச்சட்டம் வழங்குகிறது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒருவரை முறைப்படி குற்றம்சாட்டாமலும், வழக்கு விசாரணைக்கு உட்படுத்தாமலும் 18 மாதங்கள் வரையில் அதிகாரிகள் தடுத்துவைக்க முடியும். அந்த நபர் சட்டவிரோத நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டுள்ளாரா என்பதை அந்த காலகட்டத்தில் பொலிசார் ஆராய்வார்கள். நீதவான் ஒருவரின் உத்தரவைப் பெற்றுவிட்டால், வழக்கு நடத்துவதற்கு முன்பு எவ்வளவு காலம் வேண்டுமானாலும் பொலிசார் ஒரு நபரைத் தடுத்துவைக்கவும் இந்த சட்டம் இடம் தருகிறது. இலங்கையில் நீதித்துறையின் செயற்பாடுகள் சாதாரணமாக மந்தமாகத்தான் உள்ளன எனும் சூழலில், வழக்கு விசாரணைக்கு முன்பாக ஆட்கள் வருடக்கணக்கில் தடுப்புக்காவலில் இருந்துவருகின்ற அவலமும் ஏற்படுவதுண்டு.

பாதுகாப்புப் படையினர் திட்டமிட்டு மனித உரிமை மீறல்களைச் செய்ய இந்தச் சட்டம் இடம் தருகிறது. அவசரகால விதிமுறைகளைப் போலவே இந்தச் சட்டமும், ஒரு குறிப்பிட்ட மட்டத்துக்கு மேலுள்ள பொலிஸ் அதிகாரிகளிடம் கொடுக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் நீதிமன்றத்தால் ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்படும் என்று சொல்கிறது. ஆகவே சித்ரவதை உட்பட எதைச் செய்தாவது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்றுவிட வேண்டும் என்ற ஓர் ஊக்கத்தை விசாரணை செய்யும் அதிகாரிகளிடத்தில் இது ஏற்படுத்திவிடுகிறது. சித்ரவதை செய்து ஒருவரிடம் இருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற்றுவிட்டால், அப்படி பொலிசாரிடம் ஒப்புக்கொண்ட விஷயங்களைத் தான் செய்ய வில்லை என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு குற்றம்சுமத்தப்பட்ட நபர் தலையில் விழுந்துவிடுகிறது என்பதும் இச்சட்டங்களால் உண்டாகக்கூடிய பாதிப்புகளை மோசமாக்குவதாக உள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் பலர், வெறுமனே அதிகாரிகளின் உத்தரவின் பேரிலேயே ஆண்டுகள் கணக்கில் வெளியில் விடப்படாமல் உள்ளனர். தவிர காவலில் இருக்கும்போது அவர்களை அதிகாரிகள் இடம் விட்டு இடம் மாற்றிக்கொண்டிருக்கலாம், உத்தியோகபூர்வமல்லாத அல்லது இரகசிய தடுப்புக் காவல் மையங்களில் வைத்தும் அவர்களை விசாரிக்கலாம். அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் நிறையபேரிடம் சர்வதேச பொதுமன்னிப்பு சபை பேசியுள்ளது. கைதானவர்களை புனர்வாழ்வு மையங்களுக்கும், உத்தியோகபூர்வமற்ற தடுப்புக் காவல் மையங்களுக்கும் மாற்றுவதால், குடும்பத்தவர்கள் அந்த நபரைத் தொடர்புகொள்வதும், சென்று பார்ப்பதும், அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்வதும் மிகவும் சிரமாக இருப்பதாக உறவுக்காரர்கள் சொல்கின்றனர்.

"பெரும்பாலும் எங்களுக்கு எதுவுமே தெரிந்திருக்காது" என்றார் தனது மகன் எங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளான் என்று கண்டறிய உதவும்படி கேட்டு பொதுமன்னிப்பு சபையைத் தொடர்புகொண்டிருந்த தாய் ஒருவர்.

சிலவேளைகளில், தடுத்துவைக்கப்பட்ட நபர்கள் தாங்கள் எங்கே இருக்கிறோம் என்பதை தமது குடும்பத்தினருக்கு தெரியப்படுத்தவே முடியாத நிலை உருவாகும் அளவுக்கு சிரமங்கள் ஏற்படுகின்றன. ஜூலை 2006ல் ஜனாதிபதி வழங்கிய ஒரு அறிவுறுத்தலுக்கு முரணாக இந்த சூழ்நிலை உள்ளது. ஒருவர் கைது செய்யப்படும்போது அது பற்றி இலங்கை மனித உரிமைகள் ஆணையத்திடம் (SLHRC) 48 மணி நேரத்திற்குள் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று அந்த அறிவுறுத்தல் கூறுகிறது. கைதானவர் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடமும் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று அது கூறுகிறது. தவிர தடுத்துவைக்கப்பட்டவரின் உறவினர்கள் அவரைத் தொடர்புகொள்ள அனுமதி இருக்க வேண்டும் என்றும் அது கூறுகிறது.

**21 செப்டம்பர் 2008, பொலிஸ் பதிவு மையத்தின் முன்பு தமிழர்கள் வரிசையில் நிற்கின்றனர். இலங்கையின் யுத்தப் பிரதேசங்களை விட்டு வெளியேறிய ஆயிரக்காண மக்கள் (இவர்களில் கிட்டத்தட்ட அனைவரும் தமிழர்கள்) வரிசையில் நின்று தங்களைப் பற்றிய விபரங்களைப் பதிவு செய்துகொள்கின்றனர். விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கு மிகவும் அவசியமான ஒரு பாதுகாப்பு நடவடிக்கை இதுவென்று பொலிசார் வருணித்திருந்தனர்.**



© தனியார் படம்

## தமிழர்கள் கைதுசெய்யப்படுதல்

ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான தமிழர்கள் இப்படியான சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்படுகின்றனர். அரசாங்கம் சகித்துக்கொள்ளாத அரசியல் கருத்தைக் கொண்டுள்ளமைக்காக சிறையில் அடைக்கப்படும் நிறைய பேரும் இதில் அடங்குவர். குறிப்பாக நாட்டின் வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்தும், தலைநகர் கொழும்பிலிருந்தும் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினராகவோ அல்லது ஆதரவாளராகவோ இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். அரசாங்கத்தை எதிர்க்கும் குழுக்களில் முக்கியமானதாக அமைந்துள்ள விடுதலைப் புலிகள் அமைப்பு, இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலுமாக தனிநாட்டை உருவாக்கும் நோக்கத்தில் 1983ஆம் ஆண்டு முதல் ஆயுதம் ஏந்திப் போராடிவருகிறது. 2009ஆம் ஆண்டு மே மாதம் இந்த அமைப்பு தோற்கடிக்கப்பட்டுவிட்டது.

அவசரகால விதிமுறைகள் அல்லது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஆட்கள் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். ஆரம்ப காலகட்டத்தைத் தாண்டி ஒருவரை தடுத்து வைக்க வேண்டுமாயின் தடுப்புக்காவல் அனுமதி உத்தரவு ஒன்று பெறப்பட வேண்டும் என்ற விதி உள்ளது. தடுத்துவைக்கப்படும் நபர்களின் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு பல நிபந்தனைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணத்துக்கு, ஒருவர் கைது செய்யப்பட்டு 24 மணி நேரங்களுக்குள் அது பற்றி அருகிலுள்ள காவல் நிலையத்தில் தெரிவிக்கப்படும் பட்சத்தில் தான், அந்நபரைத் தடுத்து வைப்பதற்கு அனுமதி உத்தரவு வழங்கப்படும் என்று உள்ளது. இந்த விதிமுறையை மீறினால் அது ஒரு குற்றம் என்றும் உள்ளது. ஆனால் நடைமுறையில் பார்க்கையில், இப்படியான சட்டபூர்வ அரண்கள் கடைப்பிடிக்கப்படுவதில்லை. தவிர கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்படும் பலர் காவலில் உள்ள சமயத்தில் சித்ரவதைக்கு ஆளாகவும் நேரிடுகிறது.

35 வயதுடைய எழில், வழக்கு விசாரணை எதற்கும் உட்படுத்தப்படாமலேயே பத்து வருடங்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ளார். தனது சொந்த ஊரான யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்லும் வழியில் சந்தேகத்தின் பேரில் இவரைக் கைதுசெய்திருந்தனர். தற்சமயம் அவரை கொழும்பிலுள்ள வெலிக்கடை சிறையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அடைத்து வைத்துள்ளனர். இவ்வாறாக பத்து வருடங்களுக்கும் மேலாக விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் குறைந்தது பத்து பேரையாவன்து தா வெலிக்கடை சிறையில் காண் நேர்ந்ததாக சர்வதேச பொதுமன்னிப்பு சபையிடம் எழில் தெரிவித்துள்ளார். "இவர்கள் பற்றிய வழக்குகள் விசாரணைக்கு வரும் என்ற நம்பிக்கையே தனக்கு அற்றுப்போய்விட்டது" என்று அவர் கூறுகிறார்.

அவசரகால விதிமுறைகளைப் போலவே பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும், நீதிமன்ற அனுமதியில்லாமலேயே பொலிஸார் ஒரு இடத்தில் நுழைந்து தேடுதல் நடத்தவும், பொருட்களைப் பறிமுதல் செய்யவும், ஆட்களைக் கைதுசெய்யவும் பரந்துபட்ட அதிகாரங்களை வழங்குகிறது. "ஏதேனும் ஒரு சட்டவிரோத நடவடிக்கையுடன் ஒருவருக்கு தொடர்பு உள்ளது என்றாலோ, சட்டவிரோத நடவடிக்கை ஒன்றில் ஏதாவது ஒரு வகையில் ஒருவருக்கு சம்பந்தம் உள்ளது என்றாலோ, இல்லை அப்படி தொடர்பு உள்ளது என்றோ சம்பந்தம் உள்ளது என்றோ சந்தேகிக்க நியாயமான இடமிருக்கிறது என்றாலோகூட" அந்த நபரை பொலிசார் கைதுசெய்யலாம் என்று இதில் உள்ளது. இப்படியான சட்டங்களைப் பயன்படுத்தி பத்திரிகைகள் மற்றும் அச்சகங்களை அதிகாரிகள் மூடச் செய்துள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது விசாரணைக்காகவோ குற்றச்செயலைத் தவிர்க்கும் நடவடிக்கையாகவோ ஒரு சந்தேக நபரைத் தடுத்துவைக்க பாதுகாப்புத்துறை அமைச்சருக்கு அளவுக்கதிகமான அதிகாரங்களை வழங்குகிறது. அந்த நபர் எந்த இடத்தில் தடுத்துவைக்கப்பட வேண்டும், எவ்வகையில் தடுத்துவைக்கப்பட வேண்டும் என்பனவற்றை அமைச்சரே முடிவுசெய்யலாம். தவிர கருத்து சுதந்திரம், நடமாட்ட சுதந்திரம், மற்றவரோடு சேர்ந்து செயல்படும் சுதந்திரம் உட்பட ஒரு நபருடைய அடிப்படை சுதந்திரங்களைக் கட்டுப்படுத்தவும் தொடர்ந்து நிபந்தனைகள் விதிக்கவும் இச்சட்டம் பாதுகாப்பு அமைச்சருக்கு அதிகாரம் வழங்குகிறது. விடுதலையான பின்னரும் கூட இப்படியான கட்டுப்பாடுகளை அந்நபர் மீது விதிக்க அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது.

தவிர இப்படியான வழக்குகள் பற்றி செய்தி வெளியிட ஊடகங்கள் முன்கூட்டியே அனுமதி வாங்க வேண்டும் என்ற நிபந்தனையும் உள்ளது. இச்சட்டத்தின் கீழ் கைதான நபர்கள், வெளியில் வந்த பின்னரும், அவர்கள் மீது குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படவில்லை என்ற நிலையிலும்கூட, நடமாட்டம், மற்றவரோடு பழகுதல், கருத்து வெளியிடுதல், அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்றல் போன்ற அந்நபரின் உரிமைகள் மீது பாதுகாப்பு அமைச்சகத்தின் விருப்பத்திற்கு ஏற்ப கட்டுப்பாடுகள் விதிக்க முடியும் என்று உள்ளது.

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதானவர்கள் பெரும்பான்மையானோர் தடுத்துவைக்கப்பட்டுள்ள கொழும்பின் வெலிக்கடை சிறைச்சாலை. 1500 கைதிகள் வரை இருக்கக்கூடிய ஓர் சிறை இது. ஆனால் இங்கே கிட்டத்தட்ட மும்மடங்கு அதிகமானோர் அடைபட்டுள்ளனர்.**




© தனியார் படம்

## மாற்றுக் கருத்தை ஒடுக்குதல்

இவ்வகையான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின் மோசமான இயல்பு, தன்னுடைய தவறுகளைத் திருத்திக்கொள்வதில் அரசாங்கம் அடைந்துவரும் தோல்வி போன்றவற்றைத் தாண்டி, அவசரகாலச் சட்டங்களினால் தாங்கள் பெறுகின்ற பரந்துபட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி பாதுகாப்புப் படையினர் மக்களை அச்சுறுத்தி வருகின்றனர் என்பதும் கூடுதலான ஒரு கவலையாக அமைந்துள்ளது.

இப்படியான சட்டங்கள் 'பயங்கரவாதம்' போன்ற பதங்களுக்கு தெளிவில்லாமலும், மேலோட்டமாகவும் வரையறைகளை வழங்குவதால், மக்களின் கருத்துச் சுதந்திரம், மற்றவரோடு சேர்ந்துச் செயல்படுவதற்குள்ள உரிமை போன்றவற்றைக் கட்டுப்படுத்துகிறது, தவிர மனித உரிமை ஆர்லர்கள், ஊடகவியலாளர்கள், தொழிற்சங்கவாதிகள், மாற்றுக் கருத்துடையவர்கள் ஆகியோர் மீதான அழுத்தங்களையும் அதிகரிக்கச் செய்துவிடுகிறது.

"இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது என்றாலும், அவசரகாலச் சட்டங்களை அரசாங்கம் இன்னும் விலக்கிக்கொள்ளவில்லை" என சட்டத்தரணி சுதர்ஷன குணவர்தன சுட்டிக்காட்டுகிறார். "அதே பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இன்னும் அமலில் இருக்கிறது... இப்படியான சட்டங்களைப் பயன்படுத்தி எந்த ஒரு குறிப்பிட்ட ஊடகத்தையோ, மாற்றுக் கருத்தையோ ஆட்சியாளர்களால் ஒடுக்க முடியும்." என்கிறார் அவர்.

## நீதி கிடைக்கத் தாமதமானால், நீதி மறுக்கப்பட்டதாகவே ஆகும்

விடுதலைப் புலிகள் எதிரான யுத்தம் மே 2009ல் முடிவுக்கு வந்த பின்னரும்கூட, இலங்கையில் அவசர நிலை நாடாளுமன்ற உறுப்பினர்களால் மாதா மாதம் என்ற அடிப்படையில் நீட்டிக்கப்பட்டேதான் வருகிறது. அவசரகால விதிமுறைகளின் சில விதிகளை தளர்த்தப்போவதாக 2010 மே மாத முற்பகுதியில் அரசாங்கம் அறிவித்திருந்தது. மக்கள் ஒன்று கூடுவது, கூட்டம் போடுவது, அதிகாரிகள் ஊரடங்கு உத்தரவு போடுவது, சில வகையான பிரசுரங்கள் தொடர்பான விதிகள், வீட்டிலுள்ளவர்களின் பெயர்களை பொலிசாருக்கு வழங்குதல் தொடர்பான விதிகள் மற்றும் நீதிமன்ற அனுமதி இல்லாமலேயே தனியார் இடங்களுக்குள் நுழைந்து தேடுதல் நடத்த பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அனுமதி வழங்குதல் போன்றவை தொடர்பில் விதிகள் தளர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனாலும் 'பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக தற்சமயம் விசாரணைகள் நடந்துவருவதன் காரணமாய்" அவசரகால விதிமுறை அடிப்படையில் பொலிசாருக்குரிய விசாரணை நடத்தும் அதிகாரங்களை இராணுவத்தினர் பெற்றிருக்கவே செய்வர் என்று அரசாங்கம் அறிவித்துவிட்டது.

தவிர, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ரத்துசெய்யபட வேண்டும் என உள்நாட்டு மற்றும் அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் மீண்டும் கோரியிருந்தாலும், அந்த அடக்குமுறைச் சட்டம் அமலில் நீடிக்கும் என்றுதான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அந்தச் சட்டத்தின் கீழ் அதிகாரிகள் தொடர்ந்து ஆட்களை கைதுசெய்யவும், விசாரணைக்காக தடுத்துவைக்கவும் செய்கின்றனர். இந்தச் சட்டத்தின் கீழ் கைதாகி தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் 1,900 பேருக்கும் அதிகமானோர் விசாரணைகள் நிலுவையில் உள்ளதால் தொடர்ந்து காவலில் இருந்துவருகின்றனர் என்பதை உத்தியோகபூர்வ அறிக்கைகள் உறுதிசெய்கின்றன.

இருந்தாலும், சட்டத்தரணி ஒருவர் சர்வதேச பொதுச்சபையிடம் இது பற்றிக் குறிப்பிடுகையில், " தாங்கள் செய்யாத குற்றத்துக்காக சந்தேகத்தின் பேரில் எத்தனை பேர் விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பது சட்டத் தொழில் செய்யும் எங்களுக்கெ தெரியாது. சிலவேளை காத்திருந்து காத்திருந்து வெறுத்துப்போன சில கைதிகள் விரக்தியில், தாங்கள் செய்யாத குற்றத்தை ஒப்புக்கொண்டாவது தமது நிச்சயமன்ற நிலைக்கு முடிவுகட்ட முயற்சிக்கும் சம்பவங்களும் நடந்ததுண்டு. தடுத்துவைக்கப்பட்டு மூன்று நான்கு ஆண்டுகள் கழிந்த பின்னர்தான் வழக்கு நீதிமன்றத்துக்கு வரும் என்ற நிலைமை ஏற்படுவதுண்டு. விரைவாக வழக்கு நடத்தப்பட வேண்டும் என்ற எமது கட்சிக்காரனின் உரிமை மறுக்கப்பட்டு பல தடவைகள் வழக்கு ஒத்திவைக்கப்பட்டதற்கும் ஏராளமான உதாரணங்கள் உண்டு" என்றார்.

கிரிமினல் வழக்குகள் இப்படி அதிக எண்ணிக்கையில் தேங்கிக் கிடப்பது சிறைக்கைதிகளுக்கேகூட விரும்பத்தகாத விஷயமாக இருக்கிறது. ஜனவரி 2010ன்போது நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் அரசாங்கம் தம்மை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி உண்ணாவிரதப் போராட்டம் செய்திருந்தனர். அப்படி விடுவிக்காமல் போனாலும் கூட, ஒரு நியாயமான வழக்கு விசாரணை நடத்தி தம் மீதான குற்றச்சாட்டுகளுக்கு தாங்கள் பதில் தரவாவது ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென

**22 ஜனவரி 2010, அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையின் முன் உறவினர்கள் போராட்டம் செய்கின்றனர்.**



© பிரதீப் தில்ருக்ஷன



© தனியார் படம்

அவர்கள் கோரியிருந்தனர். அநுராதபுரம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற ஊர்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சிறைக்கைதிகள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர். கைதிகளின் கோரிக்கைகளை இரண்டு மாதங்களுக்குள் பரிசீலிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்ததை அடுத்து எட்டு நாட்களுக்குப் பின்னர் அவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர். ஆனாலும் அவர்கள் கோரிக்கைகளில் பெருமளவானவை இன்றளவும் நிறைவேற்றப்படாமல்தான் இருந்துவருகின்றன.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடக்கும் பெரும்பான்மையான கைது நடவடிக்கைகள் யதேச்சதிகார நடவடிக்கைகள் ஆதலால், அதிலே கைது செய்யப்படுபவர்களுக்கு நியாயமான வழக்கு விசாரணை கிடைக்கும் என்ற உத்திரவாதம் இல்லை. பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கான உரிமை அரசாங்கத்துக்கு உள்ளது என்றாலும்கூட, மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறும் வகையில் அவர்கள் அதனை ஒருபோதும் செய்யக்கூடாது.

இந்த விஷயம் பற்றி சட்டத்தரணி ஒருவர் குறிப்பிடுகையில், "இலங்கையில் நெடுங்காலமாகவே அடக்குமுறைமிக்க அவசரகாலச் சட்டங்கள் அமலில் இருந்து வருவது, பாதுகாப்புப் படையினர் கிரிமினல் நீதித்துறையின் இயல்பான வரையறைகளைத் தாண்டி செயல்படுவதை அனுமதித்து வருகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பாதுகாப்பு செயலர் எந்த நேரத்திலும் தொலைபேசியை எடுத்து எவர் ஒருவரையும் கைதுசெய்யச்சொல்லி உத்தரவிடக்கூடிய ஒரு சமூகத்தில்தான் நாங்கள் வாழ்கிறோம். சட்டத்தின் மாட்சிமையை இந்த அவசரகாலச் சட்டங்கள் எந்த வகையில் குலைக்கின்றன என்பதை உங்களால் தெளிவாக உணர முடியும். சீருடை அணியாத ஆட்கள் 'சந்தேக நபர்'களைப் பிடித்துக் கொண்டுசெல்வதில் இருந்தும், குற்றவியல் நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர் செய்யாமலேயே தடுத்துவைப்பதிலிருந்தும் இதனை நீங்கள் விளங்கிக்கொள்ளலாம். சாதாரணமாக ஒருவரைக் கைதுசெய்ய வேண்டுமாயின் அதற்கு பொலிசார் நீதிமன்றத்தின் பிடி ஆணை உத்தரவைப் பெற்றிருத்தல் அவசியம். ஆனால் அவசரகாலச் சட்டங்களின் கீழ் எவ்விதமான முறையான குற்றச்சாட்டும் இல்லாமலேயே ஆட்களை பாதுகாப்புப் படையினர் தடுத்துவைக்க முடியும்... தம்மீது வழக்கு நடத்தப்படும் என்ற நம்பிக்கை கொஞ்சமும் இல்லாத நிலையில் நெடுங்காலத்தை சிறையில் கழிக்க வேண்டிய அவல நிலை பல கைதிகளுக்கு ஏற்பட்டுள்ளது." என்று கூறினார்.

கைது நடவடிக்கை தொடர்பான நடைமுறைகளில் பரவலாகவே தெளிவின்மை நீடிப்பது கவலை தரும் விடயமாக அமைந்துள்ளது. கைதுசெய்யப்பட்டவர்களின் தேசிய அளவிலான பட்டியல் என்று எதுவும் தற்போது இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தையும் அவசரகால விதிமுறைகளையும் ரத்துசெய்யவோ, அல்லது அவற்றை சர்வதேச தர அளவுகளுக்கு ஏற்ப திருத்தவோ இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என 2000ஆம் ஆண்டு ஏப்ரலில், பலவந்தத்தின் பேரிலான அல்லது விருப்பத்துக்கு விரோதமாக ஆட்கள் பிடித்துச் செல்லப்படுதல் தொடர்பான ஐ.நா.மன்ற செயலணி கோரியிருந்தது. சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கு, அதிலும் குறிப்பாக இலங்கை கைச்சாத்திட்டுள்ள சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை பெற்றுள்ள கடப்பாடுகளுக்கு, உட்பட்டுத்தான் இலங்கை அதிகாரிகள் ஆட்களைக் கைதுசெய்யவும் தடுத்துவைக்கவும் முடியும் என்பதை சர்வதேச பொதுமன்னிப்பு சபை அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறது.

**வெற்றிவேல் ஜசீகரன் மற்றும் வளர்மதி ஜசீகரன்**

பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் (TID) 6 மார்ச் 2008ஆம் தேதியன்று வெற்றிவேல் ஜசீகரனை 'பயங்கரவாதத்துடன் தொடர்புடைய செயல்களில்' ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர். *(மேலே இடது பக்கத்தில், கையில் விலங்கிடப்பட்டு குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்லப்படுகிறார் வெற்றிவேல். 2008ல் எடுக்கப்பட்ட படம்.)* கணவருக்கு உடந்தையாக இருந்தார் என்பதற்காக வளர்மதி ஜசீகரனையும் அவர்கள் அவசரகாலச் சட்டங்களின் கீழ் தடுத்துவைத்தனர். *(படத்தில் பின்னால் இருப்பவர்.)* வெற்றிவேல் ஜசீகரன் அவுட்ரீச் ஸ்ரீலங்கா என்ற செய்தி இணையதளத்தின் எழுத்தாளரும், பிரசுரதாரரும், மேலாளரும் ஆவார். தாங்கள் கைதுசெய்யப்பட்டதும் தடுத்துவைக்கப்பட்டதும் சட்டவிரோதமானது என்று கூறி உச்சநீதிமன்றத்தில் அடிப்படை உரிமை வழக்கொன்றை 8 ஜூன் 2008 அன்று வெற்றிவேலும் வளர்மதியும் பதிவு செய்தனர். பயங்கரவாத விசாரணைப் பிரிவினரின் தடுப்புக் காவலில் வெற்றிவேல் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததாகவும் முறையிடப்பட்டிருந்தது. ஆனால் அவ்விருவரின் தடுப்புக் காவலை அவசரகாலச் சட்டங்களின் கீழ் ௩0 ஜூன் 2008 வரையிலும் பாதுகாப்பு அமைச்சகம் நீட்டித்திருந்தது.

முறையாக குற்றம்சாட்டப்படாமலேயே கிட்டத்தட்ட ஆறு மாத காலம் கழிந்த பின்னர், 27 ஆகஸ்ட் 2008 அன்று, நார்த் ஈஸ்டர்ன் மன்த்லி என்ற சஞ்சிகையை அச்சிட்டு பிரசுரித்ததன் மூலம் 'சமூக ஒற்றுமைக் குலைவைத் தூண்டினார்' என வெற்றிவேல் ஜசீகரன் மீது குற்றம் சாட்டப்பட்டது. தனது கணவருக்கு உதவியாகவும் உடந்தையாகவும் இருந்தார் என வளர்மதி மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அவர்களுடைய வழக்கு தொடங்கி ஒரு வருடம் கழிந்த நிலையில், 26 ஒக்டோபர் 2009 அன்று, அவர்கள் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் தள்ளுபடி செய்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

## சந்தன சிறிமல்வத்த



© லங்கா செய்தித்தாள் புகைப்படம்



© லங்கா செய்தித்தாள் புகைப்படம்

29 ஜனவரி 2010 அன்று குற்றப் புலனாய்வுத்துறை (CID) அதிகாரிகள் லங்கா இரிடா என்ற செய்தித்தாளின் அலுவலகத்துக்குள் அதிரடியாக நுழைந்து, அதன் தலைமை ஆசிரியர் சந்தன சிறிமல்வத்தவைக் கைதுசெய்திருந்தனர். முக்கியமான சில தகவல்கள் அடங்கியக் கோப்புக்களை ஒப்படைக்கும்படிக் கேட்டு அவரை பலவந்தம் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. ஜனதா விமுக்தி பெரமுன (JVP) அதாவது மக்கள் விடுதலை முன்னணி என்ற இடது சாரி அரசியல் கட்சியுடன் தொடர்புடைய பத்திரிகை இதுவாகும். இந்தக் கட்சி கடந்த ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் சரத் ஃபொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கி பிரச்சாரம் செய்திருந்தது. சந்தன சிறிமல்வத்தவின் வீட்டிலும் தேடுதல் வேட்டை நடத்த குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் முயன்றிருந்ததாகவும், ஆனால் வந்த அதிகாரிகள் முறையான நீதிமன்ற உத்தரவு எதனையும் காண்பிக்காதபடியால் மல்வத்தவின் மனைவி அவர்களை உள்ளே அனுமதிக்கவில்லை என சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு தெரிவிக்கப்பட்டது. பின்னர் ஜனவரி 30ஆம் தேதியன்று லங்கா இரிடா செய்தித்தாள் அலுவலகத்தில் சி.ஐ.டி. பொலிசார் இரண்டாவது முறையாக அதிரடியாக நுழைந்து பார்வையாளர்கள் யாரும் உள்ளே வரமுடியாதபடி இடத்தை மூடிவிட்,டு நிறுவன ஊழியர்களிடம் விரிவாக விசாரணைகள் நடத்தியிருந்தனர். ஏற்கனவே 2009ஆம் ஆண்டு செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் லங்கா இரிடா அலுவலகத்தில் பொலிசார் நுழைந்திருந்தனர். ராஜபக்ஷ குடும்பத்தாரை விமர்சித்து அப்பத்திரிகை கட்டுரைகள் பிரசுரித்த பின்னர் அவர்கள் இதைச் செய்திருந்தனர்.

*சந்தன மல்வத்த (இடப் பக்கம் உள்ளது அவர் சி.ஐ.டி. பொலிசாரால் தனது அலுவலகத்தில் வைத்து விசாரிக்கப்பட்ட பின்னர் எடுத்தது. வலப்பக்கம் உள்ளது அவர் விடுதலை செய்யப்பட்ட பின்னர் எடுத்தது.)* சி.ஐ.டி. தடுப்புக் காவலில் மூன்று வாரங்கள் இருந்த நிலையில், கொழும்பு நீதிமன்றம் ஒன்று அவர் குற்றம் செய்ததற்கான போதிய ஆதாரம் இல்லை, ஆதலால் அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று பிப்ரவரி மாதம் உத்தரவிட்டிருந்தது.

சந்தன சிறிமல்வத்தவின் விடுதலை கோரி சர்வதேச ரீதியில் கோரிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்த ஒரு சூழலில், அவரது விடுதலை தொடர்பில் சி.ஐ.டி. பொலிசார் 'உதவ வேண்டும்' என ஜனாதிபதி ராஜபக்ஷ 'அறிவுறுத்தியிருந்தார்' என இலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அதன் பின்னர் தான் உடனடியாக இந்த நீதிமன்ற உத்தரவு வந்திருந்தது. அவர் விடுதலை செய்யப்பட்டார் என்பது வரவேற்கத்தக்கது என்றாலும், அவர் மீதான வழக்கில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரமுகர்களின் வெளிப்படையான தலையீடு உள்ளது என்பது நிச்சயம் கவலையளிக்கும் விஷயம்தான்.

## உடனடியாகச் செயலில் இறங்குங்கள்

பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை ஜனாதிபதிக்கு எழுதுங்கள்:

- இன்னதென்று தெளிவாக தெரியக்கூடிய கிரிமினல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, சாதாரண நீதிமன்றங்களின் விளக்கமறியல் தடுப்புக் காவலில் இருப்பவர்கள் தவிர மற்ற கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்.
- அவசரகால விதிமுறைகளையும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தையும் முழுமையாக ரத்துசெய்ய வேண்டும் அல்லது சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் தர அளவுகோல்களுக்கு ஏற்ப அவற்றில் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.
- தடுப்புக்காவலில் உள்ளவர்களின் விபரங்களைப் பதிவுசெய்தல், கைதானவர் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம் பற்றி உறவினர்களிடமும் இலங்கை மனித உரிமைகள் ஆணையத்திடம் தெரியப்படுத்துதல் தொடர்பிலே 2006ஆம் ஆண்டு ஜனாதிபதி வழங்கிய உத்தரவு நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

உங்களது கோரிக்கைகள் அனுப்பட வேண்டிய முகவரி:

மேதகு இலங்கை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

ஜனாதிபதி செயலகம்

கொழும்பு 1

இலங்கை

AMNESTY INTERNATIONAL

**சர்வதேச பொதுமன்னிப்பு சபை** ஓர் உலகளாவிய இயக்கம். 150க்கும் மேற்பட்ட நாடுகளில் இவ்வியக்கம் பரவியுள்ளது. ஆதரவாளர்கள், உறுப்பினர்கள், ஆர்வலர்கள் என 2.8 லட்சம் பேர் இதில் உள்ளனர். மோசமான மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவரும் பிரச்சாரப் பணியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மனித உரிமைகள் உலகப் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் சர்வதேச தர அளவுகோள்களின் அடிப்படையிலான பிற உரிமைகளையும் உலக மக்கள் ஒவ்வொருவரும் அனுபவிக்க இடம் ஏற்படுத்த வேண்டும் என்பது எங்கள் இலட்சியம்.

எந்த ஒரு அரசாங்கமோ, அரசியல் சித்தாந்தமோ, பொருளாதார நலனோ, மதமோ சாராத சுயாதீனமான அமைப்பு இது. இது பெருமளவில் உறுப்புரிமைக் கட்டணம் மற்றும் பிறர் வழங்கும் நன்கொடைகளைக் கொண்டே செயல்படுகிறது.

ஆவணக் குறியீடு:
ASA 37/001/2011
Tamil
பிப்ரவரி 2011

Amnesty International
International Secretariat
Peter Benenson House
1 Easton Street
London WC1X 0DW
United Kingdom

amnesty.org